முத்தூரில் தேங்காய், கொப்பரை ஏலம்

வெள்ளக்கோவில், அக். 17: முத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை (தேங்காய்ப் பருப்பு) ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஏலத்துக்கு, 13,368 தேங்காய்கள் வரத்து இருந்தது. எடை 4,959 கிலோ. கிலோ ரூ. 40.15 முதல் ரூ. 55.00 வரை விற்பனையானது.

சராசரி விலை ரூ. 52.25. விற்பனைத் தொகை ரூ. 2.53 லட்சம். 46 மூட்டைகள் கொப்பரை (தேங்காய்ப் பருப்பு) வரத்து இருந்தது. எடை 1,116 கிலோ. கிலோ ரூ. 118.00 முதல் ரூ. 160.55 வரை விற்பனையானது. சராசரி விலை ரூ. 154.45. விற்பனைத் தொகை ரூ. 1.66 லட்சம்.

மொத்தம் 73 விவசாயிகள், 12 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒட்டுமொத்த விற்பனைத் தொகை ரூ. 4.19 லட்சம், அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டதாக விற்பனைக் கூட கண்காணிப்பாளர் து.சங்கீதா தெரிவித்தார்.

உதகையில் சிறுத்தை தாக்கி குதிரை உயிரிழப்பு

உதகை, அக். 17: உதகை அருகே மேய்ச்சலில் இருந்த குதிரையை சிறுத்தை தாக்கி கொன்றது.

உதகையில் மருத்துவக் கல்லூரி விடுதியின் பின்புறம் பாரதியார் நகர் பகுதியில் ஸ்கேட்டிங் விளையாட்டு மைதானம் குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள காலி இடத்தில் சனிக்கிழமை காலை குதிரை ஒன்று புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த சிறுத்தை, குதிரையை துரத்திச் சென்று தாக்கிக் கொன்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஸ்கேட்டிங் மைதானம் முன்புறம் கன்றுக் குட்டியை சிறுத்தை தாக்கிக் கொன்றது. மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இப்பகுதியில் உலவும் சிறுத்தையை கூண்டுவைத்து பிடித்து அடர்ந்த வனப் பகுதிக்குள் விட வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர் விடுமுறை: பஞ்சலிங்க அருவியில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

பஞ்சலிங்க அருவியில் உற்சாகமாக குளித்து மகிழும் சுற்றுலாப் பயணிகள்.

உடுமலை, அக். 17: தொடர் விடுமுறையை ஒட்டி உடுமலையை அடுத்துள்ள சுற்றுலாத் தலமான திருமூர்த்திமலையில் உள்ள பஞ்சலிங்க அருவியில் சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்.

உடுமலையிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது சுற்றுலாத் தலமான திருமூர்த்திமலை. இங்குள்ள புகழ்பெற்ற அமணலிங்கேஸ்வரர் கோயிலில் தரிசனம் செய்யவும், பஞ்சலிங்க அருவியில் குளிக்கவும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் வந்து செல்கின்றனர். கடந்த 3 மாதங்களாக கோடை வெயில் கடுமையாக இருந்ததால் அருவியில் நீர் வரத்தின்றி காணப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் பெருத்த ஏமாற்றம் அடைந்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக மேற்கு தொடர்ச்சிமலைப் பகுதியில் மழை பெய்து வருகிறது. இதனால் பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால் சனிக்கிழமை ஏராளமான சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் அருவிக்கு வந்து உற்சாகமாக குளித்து மகிழந்தனர். கோயில் நிர்வாகம் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது.

பல்லடம் பகுதிகளில் வீடுகளுக்குள் புகுந்த மழைநீர்

பல்லடம், அக்.17: பல்லடத்தில் பெய்த பலத்த மழைக்கு குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் அவதிக்குள்ளாகினர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பலத்த மழை பெய்தது. பல்லடம் அண்ணா நகர், பச்சாபாளையம், ராஜிவ்காந்தி நகர், வடுகபாளையம்புதூர், காமாட்சி அம்மன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழை நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர். குறிப்பாக, வடுகபாளையம்புதூர் ராஜிவ்காந்தி நகரில் வீடுகளுக்குள் புகுந்த மழைநீரை பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பாத்திரங்களால் எடுத்து வெளியே ஊற்றினர்.

இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி வடுகபாளையம்புதூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் புகார் தெரிவித்தனர்.

நீதிமன்றங்களில் சட்ட அலுவலர்கள் பணி: அக். 27, 28-இல் நேர்காணல்

திருப்பூர், அக்.17: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கீழமை நீதிமன்றங்களில் அரசு சட்ட அலுவலர்கள் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக, தகுதியான வழக்குரைஞர்களுக்கான நேர்காணல் அக்டோபர் 27, 28 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளதாக திருப்பூர் மாவட்ட முதன்மை நீதிபதி நாகசுந்தரம் முரளிதரன் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட நீதிமன்றங்களில் காலியாக உள்ள சட்ட அலுவலர் பணியிடங்களுக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாயிலாகப் பெறப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட வழக்குரைஞர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அவர்களின் தகுதியை மதிப்பீடு செய்வதற்காக 5 ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் மாவட்ட நீதிபதி தலைமையில் 3 நீதித்துறை அலுவலர் கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நேர்காணல் வரும் அக்டோபர் 27, 28-ஆம் தேதிகளில் பிற்பகல் 2.30 மணி முதல் திருப்பூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும். விண்ணப்பித்த வழக்குரைஞர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நாள் மற்றும் நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் தனியாக அழைப்புக் கடிதம் எதுவும் அனுப்பப்படமாட்டாது. குழு வாரியாகப் பிரிக்கப்பட்ட வழக்குரைஞர்களின் பெயர் பட்டியல் மற்றும் முழு விவரங்கள் திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும், அந்தந்த வழக்குரைஞர் சங்கங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

நேர்காணலில் பங்கேற்கும் வழக்குரைஞர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குழு மற்றும் நேரத்திற்கு முன்பாகவே உரிய அசல் கல்விச் சான்றிதழ்கள், பார் கவுன்சில் பதிவுச் சான்றிதழ் மற்றும் நீதிமன்றப் பணி அனுபவச் சான்றுகளுடன் ஆஜராக வேண்டும் எனவும், குறிப்பிட்ட நாளில் கலந்துகொள்ளத் தவறினால் 'ஆப்சென்ட்' எனக் கருதப்படும் எனவும் மாவட்ட முதன்மை நீதிபதி தெரிவித்துள்ளார்.

உலக காயத்தடுப்பு தினம்: அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற உலக காயத்தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

திருப்பூர், அக்.17: திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக காயத்தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் 25 பேர் சிக்கி காயமடைந்தது போன்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு, அவர்களை மீட்பதற்கான ஒத்திகை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, காவல் துறை, 108 ஆம்புலன்ஸ் சேவை மற்றும் மருத்துவமனை அவசர சிகிச்சைக் குழுவினர் இணைந்து தத்ரூபமாக நடத்தினர்.

மேலும், விபத்தில் சிக்கியவர்களை மீட்பது, காயங்களின் தீவிரத்திற்கேற்ப சிவப்பு, மஞ்சள், பச்சை மற்றும் கருப்பு என வகைப்படுத்துவது, உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளவர்களுக்கு உடனடி முதலுதவி மற்றும் உயிர் காக்கும் சிகிச்சை அளிப்பது, நோயாளிகளை உரிய சிகிச்சைப் பிரிவுகளுக்கு மாற்றுவது உள்ளிட்டவை செயல்விளக்கமாகக் காண்பிக்கப்பட்டன. அத்துடன், விபத்து ஏற்பட்ட முதல் ஒரு மணி நேரமான 'பொன்னான நேரத்தில் வழங்கப்படும் துரித சிகிச்சை பல உயிர்களைக் காப்பாற்றும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் உலக காயத்தடுப்பு தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு, கட்டுரை உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற பயிற்சி மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பரிசு, பாராட்டுசான்றிதழ்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, ரத்ததானம் செய்த தன்னார்வலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் பி. ராதிகா, திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஆர்.மனோன்மணி, துணை முதல்வர் பி. பத்மினி, மருத்துவக் கண்காணிப்பாளர் வி.உமாமகேஸ்வரி, உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் ஆர். கோபாலகிருஷ்ணன், அவசர மருத்துவத் துறைத் தலைவர் ஜி. பூங்குழலி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஊத்துக்குளி கொங்கு நீட் அகாதெமி மாணவர்கள் சாதனை

ஊத்துக்குளி கொங்கு நீட் அகாதெமியில் பயின்ற மாணவி புவனேஸ்வரிக்கு சென்னை ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியில் பயில ஆணையை வழங்குகிறார் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ்.

திருப்பூர், அக்.17: ஊத்துக்குளி கொங்கு நீட் அகாதெமி பயிற்சி மையத்தில் பயின்ற 42 மாணவர்களில் 21பேர் மருத்துவர்களாக உருவாகி சாதனை படைத்துள்ளனர்.

ஊத்துக்குளி, பவர்ஹவுஸ் பின்புறம் அமைந்துள்ள கொங்கு மெட்ரிக். பள்ளியில் 'கொங்கு நீட் அகாதெமி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி மையத்தில் கடந்த ஆண்டு 42 மாணவ, மாணவிகள் நீட் பயிற்சி பெற்று வந்தனர். இதில் தேர்வு எழுதிய மாணவர் அபிஷேக் 720-க்கு 631 மதிப்பெண்கள் பெற்று பயிற்சி வகுப்பில் முதலிடமும், 595 மதிப்பெண் பெற்று மாணவர் சந்துரு 2-ஆவது இடமும், மாணவர்கள் நிஷாந்த், பாலராகவன் ஆகியோர் 564 மதிப்பெண்கள் பெற்று 3-ஆவது இடமும் பெற்றுள்ளனர்.

மேலும் 7.5 சதவிகித அரசு இட ஒதுக்கீட்டில் மாணவி புவனேஸ்வரி 541 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். தேர்வு எழுதியவர்களில் 500க்கு மேல் 15 பேர், 400க்கு மேல் 26 பேர் மதிப்பெண் பெற்றுள்ளனர். இதில் 7.5 சதவிகித அரசு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணவி புவனேஸ்வரி மாநில அளவில் 4-ஆம் இடம் பெற்று சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவம் பயின்று வருகிறார்.

இது குறித்து பள்ளி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:

மாணவர்களின் மருத்துவக் கனவை நனவாக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் இந்த அகாதெமியில் நீட் தேர்வுக்குத் தேவையான இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனுபவம் வாய்ந்த பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் தினேஷ், ரமனேசன், புவனரஞ்சனி, மகேந்திரகுமார், நடராஜன் ஆகியோரின் வழிகாட்டுதலுடன் பாடங்களை எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் கற்பித்தல் நடைபெறுகிறது என்றார்.

காட்டெருமை தாக்கி ரயில்வே தற்காலிக பணியாளர் உயிரிழப்பு



உயிரிழந்த அலாவுதீன்

உதகை, அக்.17: குன்னூர் அருகேயுள்ள ரயில்வே காலனி பகுதியில் காட்டெருமை தாக்கியதில் ரயில்வே தற்காலிக பணியாளர் உயிரிழந்தார்.

குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காட்டெருமை நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இவை அவ்வப்போது பொதுமக்களை தாக்குவது வாடிக்கையாக உள்ளது.

குன்னூர் ரயில்வேயில் தண்ணீர் விநியோகம் செய்யும் பணியில் தற்காலிகப் பணியாளராக இருந்தவர் அலாவுதீன் (54). இவர் சனிக்கிழமை பணிக்கு சென்று கொண்டிருந்தார். ரயில்வே குடியிருப்பு காலனி பகுதியில் வந்தபோது, புதருக்குள் இருந்து திடீரென வெளிவந்த காட்டெருமை, அலாவுதீனின் இடுப்பில் முட்டி தூக்கி வீசியது. இதில் படுகாயமடைந்த அவரை ரயில்வே காலனி பகுதியைச் சேர்ந்த மக்கள் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் குன்னூர் அரசு லாலி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி அலாவுதீன் உயிரிழந்தார். இது குறித்து வனத் துறையினர் மற்றும் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மூதாட்டிக்கு மயக்க ஊசி செலுத்தி 3 பவுன் நகை திருட்டு: பெண் உள்ளிட்ட இருவர் கைது

கொடுமுடி, அக்.17: கொடுமுடி அருகே மூதாட்டிக்கு மயக்க ஊசி செலுத்தி அவர் அணிந்திருந்த 3 பவுன் நகையைத் திருடிச் சென்ற பெண் உள்ளிட்ட இருவரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

கொடுமுடி அருகேயுள்ள கொளாநல்லி பகுதியைச் சேர்ந்தவர் திருமூர்த்தி மனைவி வள்ளியம்மாள் (65). கூலி தொழிலாளி.

இவர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் தனது வீட்டின் முன்புறம் நின்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக செவிலியர் உடை அணிந்து வந்த ஒரு பெண், வள்ளியம்மாளிடம் உடல் நலம் குறித்து விசாரித்துள்ளார். அதற்கு வள்ளியம்மாள் தனக்கு கால் வலி இருப்பதாக கூறியுள்ளார். இதையடுத்து அந்தப் பெண், ஊசி போட்டால் கால்வலி குணமாகிவிடும் என்று சொல்லி வள்ளியம்மாளை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று ஊசி போட்டுள்ளார். சிறிது நேரத்தில் வள்ளியம்மாள் மயங்கியுள்ளார்.

பின்னர் அந்தப் பெண், வள்ளியம்மாள் அணிந்திருந்த 3 பவுன் நகையை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

மயக்கம் தெளிந்த வள்ளியம்மாள் இதுகுறித்து தனது கணவர் திருமூர்த்தியிடம் தெரிவித்துள்ளார். இது குறித்து மலையம்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

பெருந்துறை டிஎஸ்பி சிவகுமார் அறிவுறுத்தலின்பேரில் மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் வினோதினி தலைமையில் எஸ்ஐ பூபதி மற்றும் காவலர்களைக் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், மலையம்பாளையம் காவல் நிலையத்துக்குள்பட்ட அண்ணமார் கோயில் பகுதியில் போலீஸார் சனிக்கிழமை வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக காரில் வந்த பெண் உள்பட இருவரை சந்தேகத்தின்பேரில் பிடித்து போலீஸார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவர்கள், தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தைச் சேர்ந்த நிஷாலினி (24), ஈரோடு முத்தம்பாளையத்தைச் சேர்ந்த சௌந்தர்ராஜன் (28) என்பதும், இருவரும் ஈரோட்டில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை வேலைபார்த்து வந்ததும் தெரியவந்தது.

சௌந்தர்ராஜனின் வழிகாட்டுதலில் அந்தப் பெண் இந்த திருட்டில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீஸார் அவர்களிடமிருந்து 3 பவுன் நகை, கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் இருவரையும் கொடுமுடி குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தி சிறைக்கு அனுப்பினர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon!

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 14. தொலைபேசி: 044-28112261-90 மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்)க்கு குறிப்பாகவும் கடன் வழங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கி மின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், கீழே குறிப்பிட்ட பெயர்களில் உள்ள கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வந்து சேரவேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஆக்கப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டு, அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை, "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் 07-11-2026 அன்று விற்கப்பட உள்ளன.

கடன்தாரர் / அடமானதாரர்/மேப்படுத்துநர்:

1) M/s. RBR Garments Private Limited, எண்.177/3-A1, பச்சாங்காட்டுப்பாளையம், காரைபுதூர் கிராமம், அருள்புரம் அஞ்சல், திருப்பூர் – 641 605.
2) திரு. B. சண்முகசுந்தரம், 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604.
3) திருமதி. S. வைஷ்ணவி மீனா, 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604

அடமானத்தில் உள்ள சொத்தின் விவரங்கள்

பிணையச் சொத்தின் விவரங்கள்: M/s. RBR Garments Pvt Ltd இன் பெயரில் உள்ள சொத்து: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரைபுதூர் கிராம ஊராட்சி வாரியத்தின் எல்லைகளுக்குட்பட்ட, அருள்புரம் அஞ்சல், காரைப்புதூர் கிராமம், பச்சாங்காட்டுப்பாளையம் சர்வே எண்.177/3A1, 178/3, 179/3B1C, 179/3B1B இல் அடங்கிய M. P. மில் தோட்டம், கதவு எண்.7/67A, 7/67A1, 7/67B, 7/67C ஆகியவைகளில் அமைந்துள்ள நிலம் & கட்டிடம் வகை எண்.I: G. சர்வே எண்.177/3A1 இன் நிலங்கள் பரப்பளவு 4.96ஏக்கர்கள் @ ரூ. 4.01 அதில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.177/3A2 நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான, G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், G. சர்வே எண்.177/3B இன் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம். வகை எண்.II : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண்.177/2A இன் கிழக்கு மேற்காக வாகனப் பாதை மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலம். வகை எண்.III : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.178/3, இன் பரப்பளவு 0.04ஏக்கர்கள் முக்கோண வடிவங்கொண்ட நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1B இன் பரப்பளவு 1.44ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3A & 179/2 இல் உள்ள கிழக்கு மேற்காக கால்வாய்க்கு கிழக்கில், G. சர்வே எண்.178 பகுதி இன் நிலங்களுக்கு தெற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலம். வகை எண். IV : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.V : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 2.06 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1C இன் பரப்பளவு 1.26½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VI : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலங்களுக்கு மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VII : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்:M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.15 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B பகுதியின் நிலத்திற்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில்: ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VIII : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண். 179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 4.29 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண். 179/3A & 179/2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், ஆவண எண்.744/2002, 758/2002, 1763/2002, 5474/2003 & 2197/2004 இல் குறிப்பிட்டபடி வகை எண்.I முதல் வகை எண்.VIII வரை உள்ள மொத்தப் பரப்பளவு 8.43 ஏக்கர்கள் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள ஆர்சிசி வடிவமைப்பு கொண்ட கட்டிடம், சன்னல்கள், கதவுகள் போன்ற பிற, கதவு எண்கள்.7/67A, 7/67A1, 7/67B & 7/67C, சொத்து வரி மதிப்பீட்டு எண்.2033, 7736, 2034 & 2035, அதன் E. B. இணைப்பு எண். 03-213-001-1972, 03-213-001-2100 & 03-213-001-1105 அதனுடன் ஏனிங்குகள், வைப்புநிதிகள் போன்ற பிற மற்றும் அதனுடன் வழக்கமான நடைவழி மற்றும் எளிய உரிமைகள் போன்ற பிற உட்பட மற்றும் சொத்திற்கு செல்லும் இதர வழக்கமான சாலைகள் மற்றும் வாகனப்பாதைகள் உபயோக உரிமைகள் உட்பட. Latitude:11.0337689, Longitude:77.3279755 (Baanknet Property ID: PUNBDCB28214310)

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ. 25,00,00,000/- டேவணித் தொகை: ரூ. 2,50,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.

13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி: 25-03-2024	
13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி: 29-06-2024 (திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவரிடமிருந்து சொத்தை நேரில் கையகப்படுத்துவதற்கான உத்தரவை வங்கி பெற்றுள்ளது)	
EMD செலுத்த கடைசி தேதி	06.11.2026 அன்று மாலை 5.00 வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்ற சொத்துக்களை பார்வையிடுதல்	31.10.2026
மின் ஏல தேதி மற்றும் நேரம் 07.11.2026	நேரம்: காலை 11 முதல் மாலை 4 மணி வரை

ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை): ரூ.1,00,000/-

தொடர்புக்கு: திரு. VNS. சந்திரசேகர் அச்சல்லா, முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 8328235168. பிரமக் ராஜ் சாஹூ, சட்ட அலுவலர், மொபைல்:7477057944.

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.56,65,72,954.47 (ரூபாய் ஐம்பத்து ஆறு கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து இரண்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்கு மற்றும் பைசா நாற்பத்து ஏழு மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் 07.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://baanknet.com என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com & www.pnbindia.in ஆகிய இணையதளங்களில் காணவும்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 17.10.2026 இடம் : சென்னை — முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda India's International Bank — 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

திருப்பூர் P.N.ரோடு கிளை : 774, ஸ்ரீ குமரன் மருத்துவமனை கட்டிடம், P.N.ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், திருப்பூர் – 641 602, போன் : 0421-2482633, 2483633, மின்னஞ்சல் : tirubs@bankofbaroda.bank.in

சுவாதீன அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV [விதி–8(1)] (அசையாச் சொத்திற்காக)

பேங்க் ஆஃப்பரோடா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் 2002ம்வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமுலாக்கச் (இரண்டாவது) சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமுலாக்க விதிமுறைகளின் விதி 3க்கு இணங்கவும், **கடன்தாரர் : திரு.உன்னிகிருஷ்னன்.V, திருமதி.ஷீனா உன்னிகிருஷ்னன் மற்றும் திரு.தனுப்.V.U** என்பவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் தேதி **03.08.2026** அன்று அனுப்பி அந்த நோட்டீசில் குறிப்பிட்டிருந்த கடன் பாக்கி, **ரூ.1,39,68,571.53 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்று மற்றும் பைசா ஐம்பத்து மூன்று மட்டும்)** அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்தத் தொகைகளை கடன்தாரர் திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பொதுவாக அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) வது பிரிவின் கீழ், மேற்சொன்ன விதிகளின் விதி 8 உடன், **16.10.2026** அன்று தனது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

எனவே குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனின் மேற்படி சொத்து விஷயத்தில் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாதென்றும், அவ்வாறு மேற்கொண்டால் **ரூ.1,41,64,091.89 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொண்ணூற்று ஒன்று மற்றும் பைசா எண்பத்து ஒன்பது மட்டும்) 04.10.2026 தேதி வரை** மற்றும் வட்டி சேர்த்து பேங்க் ஆஃப் பரோடாவிற்குச் செலுத்தப்படுவதற்கு உட்பட்டதாகும்.

அசையாச் சொத்து/களின் விபரம் :

திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி சார் பதிவு மாவட்டம், அவிநாசி தாலூகா, பெருமாநல்லூர் கிராம க.ச.எண்.136ல் உள்ள 4.76 ஏக்கர் நிலத்தில் ஒரு வீட்டுமனைப் பிரிவு உருவாக்கப்பட்டு "ராபா கே.ஆர்.ஆர்.நகர்" எனப் பெயரிடப்பட்ட திலடங்கிய மனை எண்.49, 50ன் கிழபுறப் பகுதியில் மற்றும் மனை எண்.48ல் உள்ள மொத்தம் 3291 சதுர அடி நிலத்தின் **எல்லைகள் :** வடக்கு : பூங்கா மனை, தெற்கு : 30 அடி அகல கிழமேல் லேஅவுட் ரோடு, கிழக்கு : குமார் மற்றும் பிறர் வாங்கிய மனை எண்.49, 50, மேற்கு : மனை எண்.47. **அளவுகள் :** கிழமேல் வடபுறம் 51 அடி, கிழமேல் தென்புறம் 51 அடி, தென்வடல் கிழபுறம் 76.9 அடி, தென்வடல் மேல்புறம் 77 அடி. ஆகமொத்தம் 3291 சதுர அடி அல்லது 364.4 சதுர மீட்டர் நிலத்துடன் அங்குக் கட்டப்பட்டுள்ள கட்டிடமும், அதற்கான பொது ரோடுகளின் உபயோக உரிமையுடன் பிற அனைத்து இணைப்புகளும் சேர்ந்த சொத்து, திரு.V. உன்னிகிருஷ்னன் பெயரிலுள்ளது.

இடம் : திருப்பூர் தேதி : 16.10.2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பாங்க் ஆஃப் பரோடா